**தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்**

செய்தி வெளியீட்டு எண்: 116/2025 நாள்: 22.08.2025

**செய்திக் குறிப்பு**

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் அறிவிக்கை எண்: 10/2025, நாள்: 13.06.2025–ன் வாயிலாக நேரடி நியமனத்திற்கு அறிவிக்கை செய்யப்பட்ட **ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகளில் (பட்டயம் / தொழிற்பயிற்சி நிலை)** அடங்கியுள்ள பதவிகளுக்கான தாள்–I க்கான ஒளிக்குறி உணரி வகைத் தேர்வு 31.08.2025 மு.ப அன்று நடைபெற உள்ளது.

தேர்வு எழுத அனுமதிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் தாள்–I க்கான தேர்வுக்கூட அனுமதிச் சீட்டு (Hall Ticket) தேர்வாணையத்தின் இணையதளமான www.tnpsc.gov.in மற்றும் www.tnpscexams.in–ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தங்களுடைய ஒருமுறை பதிவுதளத்தின் (OTR DASHBOARD) மூலமாக மட்டுமே விண்ணப்ப எண் மற்றும் பிறந்த தேதியை உள்ளீடு செய்து தேர்வுக்கூட அனுமதிச் சீட்டினை (Hall Ticket) பதிவிறக்கம் செய்திடுமாறு தெரிவிக்கப்படுகிறது. மேலும் 07.09.2025, 11.09.2025 முதல் 18.09.2025 வரை மற்றும் 22.09.2025 முதல் 27.09.2025 வரை ஆகிய தேதிகளில் நடைபெற உள்ள தாள்–II கணினி வழித் தேர்வுக்கான அனுமதிச் சீட்டு தேர்வாணைய இணையதளத்தில் 31.08.2025 அன்று மாலை 06.00 மணிக்கு மேல் பதிவேற்றம் செய்யப்படும் என்றும் தகவலாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அ.சண்முக சுந்தரம்,இ.ஆ.ப.,
தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்